செய்தித் தாளாகப் பதிவு பெற்றது. வெள்ளிக்கிழமைதோறும் வெளிவருவது.

உ
சிவமயம்

# இந்துசாதனம்

சைவபரிபாலன சபை வெளியீடு. பிரதி விலை: சதம் 15

ஆரம்பம்: விரோதிஞு (1889) ஆவணி மீ 28 உ. அச்சகம்: சைவப்பிரகாசயந்திரசாலை, 450 காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 356

புத்-அ௩] யாழ்ப்பாணம்: விரோதிகிருது ஞு தை மீ எஉ வெள்ளிக்கிழமை (21-1-1972) [இல-சஉ

# மகாசிவராத்திரி விரத நிர்ணயம்

இவ் வருட மகா சிவராத்திரி விரதத்தை அநுட்டிப்பதில் வேதாகம விற்பன்னருக்கும் சோதிட வல்லுனருக்குமிடையில் அபிப்பிராய பேதம் ஏற்பட்டிருக்கின்றது மாசி முதலாந் திகதியிலன்றே அன்றி மாசி முப்பதாந் திகதியிலன்றே அதனை அநுட்டிக்கவேண்டுமென்பதை நிர்ணயஞ் செய்வதைக் கருதி, வேதாகம சைவ சித்தாந்த சபையினதும், சைவ பரிபாலன உயர்பீடத்தினதும், யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையினதும் பிரதிநிதிகள் சென்ற 16-1-72 ஞாயிற்றுக்கிழமை மாலை 5½ மணியளவில் சைவபரிபாலனசபை நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் சைவமக்களது மகாநாடொன்றினைக் காஞ்சிபுரம் மெய்கண்டார் சந்தானத்தைச் சேர்ந்த ஆதீனத் தலைவர் ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக பரமாச்சாரியருடைய தலைமையில் நடத்தினார்கள். கருத்தரங்கு ஆரம்பிக்கு முன் இரு கட்சியினருடைய கருத்துக்களைச் சீர்தூக்கி ஒரு முடிவைத் தெரிவிப்பதற்கு ஏழு உறுப்பினரைக் கொண்ட ஒரு மத்தியஸ்தர் சபை நியமனஞ் செய்யப்பட்டது.

மாசி முதலாந் திகதியிலன்றே அநுட்டிக்க வேண்டுமென்பதற்கும் மாசி முப்பதாந் திகதியிலன்றே சிவராத்திரி விரதத்தை அநுட்டிக்க வேண்டுமென்பதற்குமுரிய கருத்துக்கள் வழங்கப்பட்டன. மத்தியஸ்தர்கள் தங்கள் தீர்ப்பை 22-1-72 சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு

(வளர்ச்சி 3-ஆம் பக்கம்)

## தில்லை ஸ்ரீ சிவகாமசுந்தரி அம்பாள் திருக்கோயில் ஜீரணோத்தாரண மகா கும்பாபிஷேகம்

தில்லையம்பதி (சிதம்பரம்) ஸ்ரீ நடராஜப் பெருமான் திருக்கோவிலில் ஸ்ரீ சிவகாமசுந்தரிஅம்பாள் திருக்கோவில் ஜீரணோத்தாரணம் நடைபெற்று தைத்திங்கள் 23ம் நாள் (6—2—72) அன்று காலை போது தீக்ஷிதர்கள் மகா கும்பாபிஷேகம் நடத்திவைப்பார்கள்.

## மகா கும்பாபிஷேகம்

உடுப்பிட்டி இமையாணன் கும்பவாளி வீரகத்திப் பிள்ளையார் கோவில் புநராவர்த்தன சம்புரோட்சண மகாகும்பாபிஷேகம் இன்று (21-1-72) வெள்ளிக்கிழமை சிறப்பாக நிறைவுபெறுகிறது. அகில இலங்கைச் சைவக்குருமார் அர்ச்சகர் சபையைச் சேர்ந்த அச்சுவேலி சிவத்திரு. வை. தியாகராசாக் குருக்கள் அவர்கள் பிரதம குருவாகவும், சிவத்திரு. க. சிவலோகநாதக் குருக்கள் சாதகாசிரியராகவும், சிவத்திரு. ம. சுப்பிரமணியக் குருக்கள் சர்வபோதகாசிரியராகவுமிருந்து கிரியைகளைச் சிறப்புற நடாத்துகின்றார்கள். (ந. நி.)

## இலங்கைப் பல்கலைக் கழக குறிஞ்சிக்குமரன் கோவில்

ஷெ கோவில் அலங்கார உற்சவம் (இன்று) 21-1-72 தொடக்கம் 30-1-72 வரை சிறப்பாக நடைபெறும். திருமதி வ. பொன்னம்பலம், திரு. அ. நல்லதம்பி, பல்கலைக் கழக வைத்திய பீடம், கண்டி நாஷனல் ரேடிங் காப்பரேஷன், பல்கலைக் கழகப் பொறியியற் பகுதி, அரசாங்க விவசாயப் பகுதி இந்து ஊழியர்கள், பல்கலைக்கழக இந்து மாணவர்கள், யாழ்ப்பாணம் மாவட்டக் கல்லூரிகள், கண்டி இந்து வர்த்தகர்கள், பேராதனைப் பல்கலைக் கழக இந்துப் பட்டதாரிகள் மன்றம் ஆகியன உற்சவத்துக்குரிய நிதியை உதவுவார்கள். காலை 9 மணிமுதல் 11-30 மணிவரை அபிஷேக ஆராதனைகளும், மாலை 5-15 மணிக்கு விசேஷ பூசையும், மாலை 6-30 மணிக்கு திருவுலாக் காட்சியும் நடைபெறும்.

பன்னரிய வேதங்கள் சிவாக மங்கள் பகர்தமிழின் ஆங்கிலத்தின் பலவாம் நூல்கள்
தொன்மைபெறு நெறிமுறைகள் விதிகள் யாவும் துகளறவே கற்றுயர்ந்த தூய்மை யாளர்
வன்னமுற விஞ்ஞான முறைகள் காட்டி வாதிட்டிங் குண்மையினை வகுக்க வல்லார்
பொன்னனையர் பாலசுந்த்ரக் குருக்கள் கோயிற் புகழ்க்குடத்து முழுக்காட்டைப் புகல்வர் கேளீர்.

## கும்பாபிஷேக தத்துவங்கள்

பிரம்மஸ்ரீ கு. பாலசுந்தரக்குருக்கள் பி. ஏ. (சிறப்பு)

கும்பாபிஷேகத்தைப் பற்றியும் அதன் தத்துவத்தைப்பற்றியும் எழுதப்புகுமுன் சைவாலயங்களைப்பற்றியும் அவற்றின் அமைப்பைப் பற்றியும், அவற்றில் நிகழும் நித்திய நைமித்தியங்களைப் பற்றியும், அவை சைவமக்களின் நித்திய வாழ்க்கையுடன் பிரிப்பின்றி வேறறக் கலந்து நிற்கும் தகைமையினையும் ஒரு சிறிது விளக்கினுற்றுன் எடுத்துக் கொண்ட விஷயம் படிப்போர்க்குப் பயனளித்தல் கூடுமாதலின் சில வசனங்கள் முன்னுரையாகக் கூறுதும்.

இன்று நாம் அறிந்த சமயங்களுள், சிவனை முழுமுதற் கடவுளாகக் கொண்டும், வேத சிவாகமங்களைப் பதிவாக்கென விசுவசித்துமொழுகும் சமயம் சைவசமயமொன்றே என்பது ஒருதலை. யோனிவாய்ப்பட்டுத் தோன்றுனர் வழி வந்த ஏனைய மதங்களைப் போலாது, பிறந்தநாட்டொட்டு இறக்கும்வரை படுக்கைவிட்டெழுந்த நேரந்தொட்டு நித்திரைக்குச் செல்லும்வரை, எம் வாழ்வோடு பின்னிப் பிணைந்து இரண்டறக் கலந்துள்ள சமயம் சைவ சமயம் ஒன்றே.

இத்தகைய சிவநெறியின்கண் விளங்கும் பல்வேறு சிறப்பியல்புகளுள் எம் திருக்கோயிலமைப்பும், திருக்கோயில் வழிபாடும் மிகமிக விசேடமானவை. ஒரு சிறிது விளக்கின் சைவ சமயத் திருக்கோயிலமைப்பு ஏனையமதத் தேவாலயங்களினின்று முற்றிலும் வேறுபாடுடையது. எம்மாலயங்களில் நடக்கும் அபிஷேகம், ஆராதனைகள் என்றித் தொடக்கத்தனவெல்லாம் ஏனையோர்க்குப் புதியவாம். எம்திருக்கோயிலின்கணுள்ள மடைப்பள்ளி, திருப்பள்ளியறை போல்பவை வேற்றுச் சமயத்தவர்க்குச் சிந்தனைக்கும் அப்பாற்பட்டவை. சைவாலய வழிபாடு கூடுதல் தனித்தும் (mainly individual) சிறுபான்மை கூட்டாகவும் (congregational) செய்யப்படுவதாம். எம்சிவநெறியின்கண் விதந்தோதப்படும் விரதம், நோன்பு, ஜபம், அர்ச்சனை முதலியன யாவும் எமக்கே தனி, பிரதிஷ்டை, மஹோற்ஸவம், பிராயச்சித்தம் என்பவற்றைப்பற்றிக் கூறவேண்டியதில்லை.

### ஆலயம்: அதன் தத்துவம்!

யாம் முற்கூறியவாறு தனிச் சிறப்புடைய எம் திருக்கோவில்களே, ஆலயம் என்னும் சொல்லுக்குப் பொருத்தமானவை. ஆன்மாக்கள் லயப்படும் இடமே ஆ-லயம் எனப்படும். சர்வவியாபியாகிய இறைவன் ஆன்மாக்களுக்கு அருள் செய்யும் பொருட்டு எழுந்தருளியிருக்கும் இடம் குரு - லிங்க - சங்கமம் என்னும் மூன்றுமாம். அவற்றுள்ளும் ஆலயங்களிலேயே எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகும் அந்தணர்களால் விதிப்படி பிரதிட்டை செய்யப்பட்டு எழுந்தருளியிருக்கின்றான்.

ஆலயத்தின் பரியாய நாமங்களுள், தேவகிருகம், தேவாலயம், தேவகுலம், தேவாயதனம், க்ஷேத்திரம், சைத்யம், கோவில் என்பன சில. இவை இறைவன் இல்லம். இறைவன் கோட்டம், இறைவன் உறையுள் என்றெல்லாம் பொதுவாகப் பொருள்படும். "பிராஸாதம்" என்னும் சொல் "சில்பரத்தினம்" என்னும் நூலின்படி திருக்கோவிலைக் குறிக்க எழுந்த அழகிய சொல்லாம். தேவர்களதும் மக்களதும் உள்ளங் கவர்ந்து மகிழ்ச்சியூட்டுவதனால் இப்பெயர்த்தாயிற்று. அரசர்களும் தெய்வங்களும் வதியும் இடம் பிராஸாதம் என நிகண்டு கூறும்.

"விமானம்" என்னும் சொல்லே ஆதியில் ஆலயத்தைக் குறிக்க எழுந்தது. இன்று அது கருவறையின் மேலுள்ள சிகரத்தையே குறிக்கின்றது. இது சிறந்த தத்துவக் கருத்துக்களைத் தன்னுளடக்கியது. அமரகோசம் என்னும் வடமொழி நிகண்டுநூல் தேவர்களது ஊர்திவிமானம் என்று கூறும், புஷ்பகவிமானம் எடுத்துக்காட்டாகும். தேரின் அம்சங்களைக் கொண்டு விமானம் அமைந்திருக்கின்றது என்பதே இந்திய சிற்ப நூல்கள் கூறும் உண்மையாம்.

இச்சொல் "மா" (அள) என்னும் வினை அடியாகப் பிறந்து "வி" என்னும் உபஸர்க்கத்துடன் கூடி "விசேடமான அளவு" என்னும் பொருள்பட நின்றது, பெருமைக்கும், நுண்மைக்கும், பேரருட்கும், பேற்றினருமைக்கும் ஒப்பின்மையுடையவனும், முற்றறிவுடையவனுமாகிய கடவுள் தன்னைச் சில்வாழ்நாட் பலபிணிச் சிற்றறிவினராகிய ஆன்மாக்கள் ஓரளவு அளவிட்டறிய வேண்டும் என்னும் பெருங்கருணையினாலே ஆலய நிர்மாணத்தை ஆகமங்களில் விதித்தான். ஆலய அமைப்பின் ஒவ்வோரம்சமும் அவனது இயல்புகளை உணர்த்தி நிற்கும். இவ்வுண்மையை உன்னுந்தொறும் அவனது கருணையை நினைந்து ஆனந்த பாஷ்பம் சொரியும்.

### ஆலய அமைப்பின் நோக்கம்!

இறைவன் சர்வ வியாபி. அகண்ட பரிபூரண சச்சிதானந்தப் பரம்பொருளாகச் சரம், அசரம் ஆகிய எல்லாப் பொருளிலும் பிரிப்பின்றி நிற்கும் பொருளுக்குத் திருக்கோயில் அமைத்தல் சாலுமா எனச் சிலர் வினவலாம். இறைவனை நாற்புறமும் சுவரெழுப்பிக் குறுகிய பரப்பினதாகக் கோயில் சமைத்து அதனுள் அடக்கலாமா? சிறு எல்லைக் குட்பட்ட கோவிலையே அவன் உறைவிடமாகக் கொள்வது எத்துணைப் பொருத்தம்? ஐந்து இருத்தல் நிறையுள்ள சுவாமிக்கு ஐந்து தொன் நிறையுள்ள தேர் எதற்கு? என்றெல்லாம் வினாக்கள் எழும் காலம் இது. இவ் வினாக்களுக்குப் பல ஞானிகள் பலவாறு விளக்கம் கொடுத்துள்ளனர். இறைவன் திருவருள் எங்கும் வியாபித்துள்ளது. எனினும் அதனைப் பெறுவதற்கு முக்காலம் உணர்ந்த ஞானிகள் பல முறைகளைக் கையாண்டுள்ளனர். அதனைத் தெய்வத் தன்மை பொருந்திய விருட்சங்களிலும், மலைகளிலும், நீர்நிலைகளிலும், மூர்த்திகளிலும் இடங்களிலும் பக்தர் பெற முடியும்.

"மூர்த்தி, தலம், தீர்த்தம் முறையாய்த் தொழுபவர்க்கு வார்த்தை சொ

(வளர்ச்சி 2-ஆம் பக்கம்)

சைவ சமயத்தவர்களின் செய்திப் பத்திரிகை

THE SAIVAPRAKASA PRESS

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவர் ஆனினம் வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல் லாம்அர னாமமே சூழ்க வையக முந்துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

# இந்து சாதனம்

விரோதிகிருது வருடம் தை மீ எ-உ வெள்ளிக்கிழமை [1972

## கலாசார அபிவிருத்தி

கலாசார அமைச்சர் கௌரவ. எஸ். எஸ். குலதிலகாவும் தபாலமைச்சர் கௌரவ. செ. குமாரசூரியரும் 17-1-72 திங்கட்கிழமையன்று யாழ்ப்பாணத்தில் நிகழ்ந்த தமிழ் இலக்கிய விழாவில் கலந்துகொள்ள விஜயஞ் செய்தார்கள் "கட்சிபேதமோ இனபேதமோ கருதாது இருமொழிகளிலும் நூல்களை எழுதும் கலைஞர்கள் யாவரையும் அரசாங்கம் ஆதரிக்கும். எமது நாட்டுக் கலைஞர்கள் எவ்வளவு கஷ்டத்துடன் பணிபுரிகின்றார்களென்பதை யான் அறிவேன். அவர்களுடைய கஷ்டங்களை இயன்றவரையில் நீக்கி அவர்கள்மூலம் நாடு பெறவேண்டிய நலன்களைப் பெறக்கூடிய வழிவகைகளைக் கையாள நமது கலாசாரப்பகுதி திட்டமிட்டிருக்கின்றது" எனக் கலாசார மந்திரியவர்கள் தெரிவித்தனர். இரு மந்திரிமார்களும் நல்லூர் திருஞானசம்பந்தராதீனத்திற்கும் விஜயஞ் செய்தனர். நாவலர் சைவத்தையும் தமிழையும் பேணிக் காத்து வந்ததுபோல ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரான் அவர்கள் கடமை புரிகின்றதைப் போற்றினார்கள். தமிழ் மக்களுக்கும் சிங்கள மக்களுக்குமிடையிலுள்ள தொடர்பைப் பலப்படுத்த நாவலர் பெருமானது ஞாபகார்த்தமாக முத்திரையை அரசாங்கம் வெளியிட்டு நாவலர் பெருமானைக் கௌரவித்ததெனவுங் குறிப்பிட்டார்கள். ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரான் அவர்கள் புரிந்து வருகின்ற தொண்டினை கலாசார மந்திரிகலர்கள் கண்டு மகிழ்ந்து ஆதீன வளர்ச்சிக்குரிய பணிகளுக்கும் கட்டடங்களுக்கும் நிதி வழங்க இந்துகலாசார பேரவைமூலம் நிதி உதவக் கூடிய நடவடிக்கைகளையும் மேற்கொள்வதாகவும் கலாசார மந்திரியவர்கள் வாக்களித்துள்ளனர்.

தமிழ்க் கலாசாரத்தை வளர்ப்பதற்கு இரு மந்திரிகளும் கொண்டுள்ள ஆர்வம் பாராட்டுக்குரியதாகும். கலை மக்களுடைய நற்சிந்தனையை வளர்க்கத் துணைபுரியும் ஒரு கருவியாகும். கலாசாரம் கலையினால் உண்டாகும் ஒழுக்கம். கலாசாரத்தை வளர்க்கின்ற நூல்கள் தெய்வ சம்பந்தமுடையனவாக விளங்குதல் வேண்டும். கடவுள் பக்தியே மனிதனுடைய உள்ளத்தைத் தூய்மை செய்து அவனுடைய மனம் வாக்குக் காயமாகிய திரிகரணங்களையும் தூய்மை செய்யும். அவன் மனத்தினால் நல்ல எண்ணங்களைச் சிந்திப்பான். வாக்கினால் அறிவுள்ள வாக்கியங்களை உரையாடுவான். காயத்தினால் பிறருக்கும் தனக்கும் நன்மை பயக்கக்கூடிய செயல்களைப் புரிவான். கந்தபுராணத்தில் கச்சியப்பசிவாசாரியார் எவ்வாறு கலாசாரத்தை காஞ்சிபுரத்திலுள்ள மக்கள் பேணினார்களென்பதைக் கீழ்வரும் திருவிருத்தத்தின் மூலம் தெரிவிக்கின்றார்.

நாட்டியச்செயல் யாவையும் சிவனது நடனம்
பாட்டிசைத்திறம் யாவையுமன்னதே பதியோர்
கேட்டிருப்பன யாவையும் அவனிசைக் கேள்வி
கூட்டம் யாவையு மன்னவன் தொண்டுசெய்கூட்டம்.

காஞ்சிபுரத்திலுள்ள மக்களுடைய நடனம் யாவையும் சிவசம்பந்தமானவையாகும். புலவரவர்களுடைய பாடல்கள் எல்லாம் சிவனுடைய புகழையே எடுத்தியம்பும். அவர்கள் காதினாற் கேட்பனவெல்லாம் சிவனுடைய புகழேயாகும். மக்கள் நடத்துகின்ற கூட்டம் யாவையும் சிவனுடைய தொண்டு புரிவனவாகவிருக்கும் கலாசாரத்தை வளர்ப்பதற்குரிய பாடல்களையும், நடனங்களையும், ஓவியங்களையும் உரையாடல்களையும் படைக்கின்ற கலைஞர்கள் இத் திருவிருத்தத்தின் பொருளையுணர்ந்து தொண்டாற்றுவராயின் நாட்டு மக்கள் ஞானமும் இன்பமும் அடைந்து வாழ்வார்கள்.

## கும்பாபிஷேக தத்துவங்கள்

[1-ஆம் பக்கத்து வளர்ச்சி]

லச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே". என்றும் தாயுமான சுவாமிகள் கூறியுள்ளார்.

எங்கும் வியாபித்திருக்கும் இறைவன் திருவருளைத் திருக்கோவிலிலே மந்திர பூர்வமாகப் பிரதிட்டை செய்யப்பட்டிருக்கும் உருவத்திருமேனிகள் மூலமே பெறலாம் என்பதற்குக் கொடுக்கப்பட்டிருக்கும்விளக்கங்களுள் ஒன்று பின்வருமாறு:—

பசுவினது உடம்பெங்கணும் குருதிபரந்தோடுகின்றது. அது சூல்கொண்டு கன்றை ஈன்றதும் அக் குருதி பக்குவமடைந்து பாலாகப் பரிணமிக்கின்றது. அப்பால்தானும் அதனுடையஎல்

(வளர்ச்சி 8-ஆம் பக்கம்

## திருக்குறள் THE GREAT KURAL

பாயிரவியல் Introduction

[யாழ்ப்பாணத்து, நல்லூர் சிவபக்தமாமணி திரு ச. சூரசங்கரன் LLB (Lond) நியாயதுரந்தரர், அவர்கள் எழுதியுள்ள 'திருக்குறள உரைக்கோத்து' என்னும் நூலிலிருந்து எடுக்கப்பட்டது. —ஆசிரியர்]

அதிகாரம் I கடவுள் வாழ்த்து

குறள் 5) (முற்றொடர்—5)

இருள்சேர் இருவினையுஞ் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு

அறியாமையால் உண்டாகும் நல்வினை தீவினை என்னும் இரண்டு வினைகளும் இறைவனது மெய்யான புகழை விரும்பி அவனை வணங்குபவனைச் சேரமாட்டா.

The fruits of actions, good & evil, lorn of ignorance will not affect thosewho sing earnestly the true praises of the Lord

இருள் - அறியாமை; மயக்கம் - புரிந்தார், என்பதற்கு இடைவிடாது தியானிப்பவர்கள், எப்பொழுதும் சொல்லுபவர்கள் என்னும் தகும். இருள்சேர் இருவினையும் என்பதற்குப் பிற உரைகள்:- இருவினை பற்றிய பாவமானது; மும்மல வித்தாகிய பாவமானது; இச்சைகள் பண்ணுவிக்கிற மயக்கத்தினால் வருகிற நல்வினைக கலப்புகள்; அறிவின்மையால் உண்டாகும் பெரிய துன்பங்கள்; அறியாமையால் வருகின்ற நல்வினை தீவினை என்னும் இருவினைப் பயன்களாகிய இன்ப துன்பங்கள்.

(வளரும்)

## திருமுறைப் பாராயணம்

[ஆசிரியர் திரு. செ. சின்னத்துரை, ஏழாலை, சுன்னாகம்.]

(முன் வளர்ச்சி —2)

இறைவன் நாமத்தை அவரின் புகழைக் கூறும் மந்திர வடிவான திருமுறைகளை எல்லோரும் சேர்ந்து பாடுவதனால் ஒரு தெய்வ சக்தி பிறக்கின்றது. அந்த சக்தி அலைகள் காற்றில் நின்று நிலவும் அவைகள் சாந்தியைக் கொடுப்பன. எமது சைவ ஆலயங்கள் பலவற்றில் இப்பொழுது வெள்ளிக்கிழமைகளில் தோறும் பிரார்த்தனையும் திருமுறைப்பாராயணமும் நடைபெறுகின்றன. இது நல்ல ஒரு சூழ்நிலை, திருமுறைப் பாராயணம் செய்யும்போது ஒரு முறையைக் கைக்கொள்வது நல்லது. பன்னிரு திருமுறைகள் ஓம் இல் அடக்கம் அகில உலகமும் 'ஓ'க்குள் அடக்கம் இறைவன் தான் உலகம் ஓங்கார வடிவமாய் என் உள்ளத்துள் இறைவன் திகழ்கிறார் 'உய்ய என் உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற' என்று மணிவாசகர் செப்புகிறார். முதலாம் திருமுறை "தோடுடைய செவியன் .." என்ற பாடலுடன் ஆரம்பமாகிறது. ஆகையால் திருமுறைப் பாராயணம் செய்யும்போது விநாயகப் பெருமானுக்கு வணக்கம் செலுத்தித் "தோடுடைய செவியன்..." என்ற பாடலுடன் ஆரம்பிக்க வேண்டும். முதல் மூன்று திருமுறைகள் ஞானசம்பந்தரின் தேவாரங்கள், 4, 5, 6ம் திருமுறைகள் அப்பர் சுவாமிகளின் தேவாரங்கள், இவற்றில் சிலபாடல்களைப் படிக்கலாம். 7ம் திருமுறை சுந்தரமூர்த்தி சுவாமிகளின் தேவாரம், தோடுடைய செவியன், கூற்றாயினவாறு, பித்தாபிறை சூடி முதலிய தொடக்கத்தையுடைய தேவாரங்களை அவசியம் ஓதவேண்டும். பின் திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருமந்திரம், 11ம் திருமுறைப்பாடல்கள், 12ம் திருமுறைப்பாடல்கள் (பெரியபுராணம்) ஓதவேண்டும்.

"ஓ" என்னும் எழுத்துடன் தொடங்கிய திருமுறை "ம்" என்னும் எழுத்துடன் முடிகின்றது. அது பெரிய புராணத்தின் இறுதிப்பாட்டிலுள்ளது.

என்றுமின்பம்
பெருகுமியல்பினாலே
ஒன்றுகாதலித்து
உள்ளமும ஓங்கிட
மன்றுளார் அடியார்
அவர் வான்புகழ்
நின்றதெங் கும்நிலவி
உலகெலாம்

திருமுறைகளை ஓதியபின் கந்தரலங்காரம், கந்தரனுபூதிப் பாடல்கள் சிலவற்றைப் படிக்கலாம். பின் திருப்புகழ் ஓதவேண்டும். திருமந்திரத்தில் (10ம் திருமுறை) பின்வரும பாடல்கள் ஒவ்வொரு முறையும் இடம்பெறுவது நல்லது.

அன்பும் சிவமும் இரண்
டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது
ஆரும் அறிகிலார்

அன்பே சிவமாவது
ஆரும் அறிந்தபின்
அன்பே சிவமாய்
அமர்ந்திருப்பாரே.

சிவ சிவ என்கிலர்
தீவினையாளர்
சிவ சிவ என்றிடத்
தீவினைமாளும்
சிவ சிவ என்றிடத்
தேவருமாவர்
சிவ சிவ என்னச்
சிவகதி தானே.

11ம் திருமுறையில் மூத்த நாயனார் திருவிரட்டை மணிமாலையிலுள்ள பின்வரும் பாடலையும்,

விநாயகனே வெவ்வினையை
வேரறுக்கவல்லான்
விநாயகனே வேட்கை
தணிப்பான் — விநாயகனே
விண்ணிற்கு மண்ணிற்கு
நாதனுமாந் தன்மையினாற்
கண்ணிற் பணிமின் கனிந்து.

11ம் திருமுறையிலுள்ள திருமுருகாற்றுப்படையில்

முருகனே செந்திமுதல்வனே
மாயோன்
மருகனே ஈசன் மகனே —
ஒருகைமுகன்
தம்பியே நின்னுடைய தண்
டைக்காலெப்பொழுதும்
நம்பியே கைதொழுவே னான்"

என்ற பாடலையும் படிக்கலாம். திருப்புகழ் படித்த பின்வரும் பட்டினத்தடிகள் பாடல்களை படிப்பது நல்லது.

கல்லாப் பிழையுங் கருதாப்பிழை
யுங் கசிந்துருகி
நில்லாப்பிழையு நினையாப்பிழையு
நின் னஞ்செழுத்தைச்
சொல்லாப் பிழையுந் துதியாப்
பிழையுந் தொழாப் பிழையும்
எல்லாப் பிழையும் பொறுத்
தருள்வாய் கச்சி யேகம்பனே.

கொல்லாமற் கொன்றதைத்
தின்னாமற் குத்திரங் கோள்களவு
கல்லாமற் கைதவரோ டிணங்கா
மற் கனவிலும் பொய்
சொல்லாமற் சொற்களைக் கேளா
மற் றோகையர் மாயையிலே
செல்லாமற் செல்வந் தருவாய்
சிதம்பர தேசிகனே".

திருமுறைப் பாராயணம் முதலியன முடிந்தபின் பட்டினத்தடிகள் பாடல்களை ஓதுவது தற்போதம் இழந்து இறைவனுக்கு வேண்டுகோளாகவும் அவரிடம் மன்னிப்புக்கோருவதாகவும் அமைகிறது. இவற்றைச்சிறுவர் மனதில்பதிய வைத்தால் அவை வேரூன்றிப் பரிணமிக்கும் பிரசங்கமாகவும் அமைகின்றன. வளர்ந்தோர்க்கும் முதியோர்க்கும் நல் ஆராய்ச்சியுமாகவும் அமைகின்றன. திருமந்திரப் பாடல்களும் இத்தகையன. வாழ்க சைவம்! வாழ்க திருமுறைகள்! வாழ்க சிவனடியார்கள்.

## நாவலர் நல்வாக்கு

தரித்திரனாய் இருக்கும் போது திருத்தி அடையாதவன், செல்வனாய போதும், திருத்தியடையான்; திருத்தியடையாமை மனக் குற்றமே அன்றிப் பொருட் குற்றம் அன்று.

## அன்புத் திருப்புகழ் (கந்தவனம்)

| | | |
|---|---|---|
| மதிமுந்திச் | சென்றிடுகற் | பனையாலே |
| மருளுந்திக் | கன்றுதுயர்க் | கடலாலே |
| கதியின்றித் | துன்றுபிணிக் | குழலாதே |
| கழலன்புச் | சிந்தனையைத் | தருவாயே |
| விதிவெம்பச் | சிந்துசிகைக் | கிடிதாளம் |
| மிதிதந்தப் | பன்குளிரப் | புகல்பாலா |
| பொதுமன்றிற் | சந்தநடச் | சிவரூபா |
| பொலிகண்டிக் | கந்தவனப் | பெருமானே. |

— அளவையூர் "அருட்கவி", சீ. வி.

## மகா சிவராத்திரி விரத நிர்ணயம்

[ 1- ஆம் பக்கத்தின் வளர்ச்சி ]

வழங்குவதாகக் கூறியபின்பு மகாநாடு பூர்த்தியடைந்தது. கடந்த காலங்களிலும் சில வருடங்களில் மாசி மாதத்தில் சிவராத்திரி விரதத்தை அநுட்டிப்பதில் இரு தினங்கள் பஞ்சாங்ககாரரால் குறிக்கப்பட்டு சைவமக்களுக்கு கலக்கம் ஏற்பட்டதை நேயர் அறிவார்கள். இவ் விதமான விவாதத்துக்குரிய விஷயத்தை அறிஞர்கள் கூடி ஆராய்தல் விரும்பத்தக்க செயலாகும். சிவராத்திரி விரத நிர்ணயத்தை அறிஞர்களுடைய கருத்துக்களை ஆராய்ந்து முடிவு செய்தற்குரிய ஒழுங்கை ஏற்படுத்திய சபைகளின் முயற்சியைப் பாராட்டுகின்றோம்.

## நடுவர் குழுவின் அபிப்பிராயம்

மேற்படி குழுவின் கூட்டம் 23-1-72 ஞாயிற்றுக்கிழமை காலை 9-30 மணிக்கு வண்ணை. நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெற்றது. அவ்வமயம் ஆலோசனை செய்து ஆய நடுவர்கள் 13-3-72 திகதி இரவு திரயோதசி சதுர்த்தசி சம்பந்தமாகையாலும் அன்று சோமவாரம் ஆகையாலும் அவிட்ட நட்சத்திரம் நிலவுவதாலும் ஸ்ரீ கிருஷ்ண ஜயந்தியிலிருந்து 184 - ஆம் நாள் ஆகையாலும் உத்தமத்தில் உத்தமமாகக் கருதினர். நடுவர்களில் ஒருவர் 13-2-72 திகதி மாசி மாதக் கிருஷ்ணபக்ஷ சதுர்த்தசி என்ற வகையில் அம் மாதத்தில் 1-வது ஆக வருவதால் அத் திகதியே உத்தமமானதென்று கருதினர்.

---

### திருப்புகழ் மண்டபத்தில் இன்னிசை விரிவுரை

25-1-72 செவ்வாய்க்கிழமை இரவு 7-30 மணியளவில் நல்லைக்கந்தன் கோயில் திருப்புகழ் மண்டபத்தில் நல்லைத் திருஞானசம்பந்தர் ஆதீன கர்த்தர் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத்தம்பிரான்சுவாமிகள் இன்னிசைச் சொற்பொழிவு நிகழ்த்துவார்கள்.

### ஆசார்யாபிஷேகம்

எதிர்வரும் 28-1-72 வெள்ளிக்கிழமை பகல் 10 மணிக்குமேல் 11 மணிக்குள் அகில இலங்கை இந்துமா மன்றக் குருகுலப்பயிற்சி நிலையத்தால் பயிற்றப்பட்ட மாணவர்களுக்கு அழகொல்லை விநாயகர் ஆலயத்திற்கு அருகாமையில் அமைக்கப்பெற்ற அலங்கார மண்டபத்தில் ஆசார்யாபிஷேகம்செய்துவைக்கும் வைபவம் சிறப்புறநிகழவிருக்கிறது.

---

நேயர் நெஞ்சம்

## ஜனநாயகமும் சோஷலிஸமும் சிவஞானநெறியே!

இவ்வாக்கியம் ஆதீன வித்துவான் க. கணபதிப் பிள்ளை அவர்களால், நல்லை ஞானசம்பந்தர் ஆதீனத்திலே நடைபெற்ற கூட்டத்தில் குறிப்பிடப்பட்டதென 17-1-72 இல் வெளிவந்த "தினகரனில்" வெளியிடப்பட்டுள்ளது. ஓர் ஆதீன வித்துவான் உண்மையில் இவ்விதம் பகிரங்கமாகக் கூறியிருப்பராயின் மெய்ச் சைவர்களின் அனுதாபத்துக்கு உரியவராவர். சிவஞானநெறி சத், சித், ஆனந்த நெறியாகும். இது அரசியல் அறிவு நெறிக்கு அறவே வேறுபட்டதாகும். அரசியல் அறிவு, கல்வி, கேள்வி முதலிய நெறிகளில் அடையக் கூடியது முயற்சிக்கும், ஆராய்ச்சிக்கும் உட்பட்டது. காலம், இடம், காரணம, காரியம் முதலிய எல்லைக்குள் கட்டுப் பட்டது. சிவஞானமோ ஆராய்ச்சியாலும், அறிவு முயற்சியாலும் பெற முடியாதது. அதனாலன்றோ மெய்கண்ட சாத்திரமாகிய திருவருட்பயனில் "ஓராதே! ஒன்றையும் உற்றுன்னாதே! நீ முந்திப்பாராதே! பார்த்ததனைப்பார்! என உமாபதி சிவாச்சாரியார் மொழிந்துள்ளார்?

சிவஞானம், காலம், இடம், காரணம், காரியம் முதலிய எல்லைக் கோடுகளுக்கு அப்பாற்பட்டு அறிவு, அறியாமை இரண்டும் அகற்றிச் செறிவறிவாய் — நீக்கம் அற எங்கும் நிறைந்திருப்பது. பரிபூரணத்துவம் உடையது. அரசியல்நெறி சார்புள்ளது — (Relative) சிவஞானத்தின் பூரணநிலை எங்கே? அரசியலின சார்பு நிலை எங்கே? சார்பு உணர்ந்து, சார்புகெட ஒழுகுவதே சிவநெறி. சார்பு உணராது சார்புகொண்டு ஒழுகுவதே அரசியல் நெறி. அது திரிபுடி ஞானநெறியாகும்.

உலகியலுக்கு அரசியல் அறிவு அத்தியாவசியம் அதற்கு மறுப்பில்லை. அதை இழிவுபடுத்துதல் அறியாமையாகும். அதற்காக அரசியலுக்கும் சிவஞானத்துக்கும் சமநெறிப்பாலம் அமைப்பது ஆதீன வித்துவானுக்கு அடுக்காது எனச் சைவ உண்மைநெறி நின்று கூற விரும்புகிறேன். அறிபவன், அறிவு, அறியப்படும் பொருளாகிய மூன்றும் நீங்குவதே சிவநெறியாகும்,

"யா காவாராயினும் நா காக்க!"

நா. செல்லப்பா,

41, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம். 18-1-72

---

2- ஆம் பக்கத்தின் வளர்ச்சி

லா உறுப்புக்களிலிருந்தும் பெறமுடியாது. பாலைப்பெறுதற்குரிய அதன்முக்கியஉறுப்புக்கள்முலைகளே. அங்ஙனமே பசுவாகிய உலகமெங்கணும் பரந்துவிளங்கும் இறைவனது கருணையாகிய பாலைச் சுரப்பதற்கு உருவத் திருமேனி கொண்டு எழுந்தருளியுள்ள முக்கிய ஸ்தானம் திருக்கோயிலேயாகும். எனவே திருக்கோயில் நாட்டின் முக்கிய உறுப்பாகும். இதனாலன்றோ ஆலயங்களை ஊர் நாப்பண் கொண்டு நகர் நிர்மாணம் செய்யுமாறு ஆகமங்கள் நுவலுகின்றன.

இவ் வுண்மையை இக்காலவிஞ்ஞான ரீதியிலும் விளக்கலாம். உலகெங்கணும் பரந்திருக்கும் ஒளிக் கதிர்களை நாம் எவ்விடத்தும் இலகுவில் பெற முடியாது. மின் துறையிற் கைதேர்ந்த விஞ்ஞானிகளாற் கட்டப்பட்ட மண்டபங்களிலே முறைப்படி தாபிக்கப்பட்ட எந்திரங்களிலிருந்து உற்பத்தியாகி வரையறுக்கப்பட்ட மின்சக்தியைப் பரப்பும் மின் விளக்குகள் மூலமே நாம் ஒளியைப் பெற முடியும். இங்ஙனமே உலகம் முழுவதும் வியாபித்துள்ள ஒலிக் கதிர்களைப் பெறுவதற்கும் அவ் வச் சக்தியுடைய பொறிகளின் உதவியையே நாடுகிறோம். மின் நிலையத்தின் உதவியின்றி ஒளி பெறவும், ஒலிக் கருவியின்றிச் செய்தியறியவும் முடியுமேல் ஆலயமின்றி ஆண்டவனருளைப் பெறுதலும் சாலும் என்க.

### ஆலய அமைப்பு:

சைவாலயங்கள் புருஷ ரூபத்தில் அமைந்தமை விசேடத்துவம் வாய்ந்தது. ஏனைய மதத்தவரின் தேவாலயங்கள் அவரவர் வணக்க முறைக்கியைய மண்டபங்களாக அமைந்தவை. ஆனால் 'காயமே கோயிலாக'க் கண்ட சநாதந மக்களின் கோயில்களிலோ ஒரு மனிதன் படுத்திருக்கும் பாங்கில் அமைந்தவையாகக் காணப்படும். வணக்கத்திற்கும், ஆன்ம ஈடேற்றத்துக்கும் உரியனவாகிய சைவாலயங்களின் இத்தகைய அமைப்பே சிவநெறியின் தனித்துவத்தைக் காட்டும். மேலும், தென்னாடுடைய சிவனும் எந்நாட்டவர்க்கும் இறைவனுமாகிய எம்பிராற்குத் தென்னாட்டிலும் இலங்கையிலுமே கலைகளுக்கு நிலைக்களனாக விளங்கும் திருக்கோயில்கள் எழுந்தமை அற்புதம்! அற்புதம்!! அம்மட்டோ? சங்கீதம், நாட்டியம் முதலிய கலைகள் வளர்ச்சியுற்ற திருக்கோயில்களில் நுண்கலைகளுட் டலையாய கட்டடக் கலையும், சிற்பக் கலையும், ஓவியக்கலையும் சிறந்தோங்கியமை பாரதக் கலைகளின் பெருமையையே குன்றின் மேலிட்ட விளக்கெனக் காட்டும்.

### கும்பாபிஷேகம்:

கும்பாபிஷேகம், குடமுழுக்கு, பிரதிட்டை என்பன ஒரு பொருட் கிளவிகள். மேற் கூறியவாறு அருவுருவாகிய இலிங்கத்தையோ, உருவத் திருமேனியாகிய மூர்த்தியையோ பிரதிட்டை செய்வதற்குக் கர்ப்பக்கிருகம் (கருவறை அர்த்த மண்டபம் என்னும் இரு மண்டபங்களும் பூர்த்தியாதல் வேண்டும் இவ் விரு மண்டபங்களும் நிறைவு பெறுவிடின் மூர்த்தியை ஸ்தாபித்தலோ, கும்பாபிஷேகம் செய்தலோ முடியாததாம்,

### பிரதிட்டையின் தத்துவம்

பிரதிட்டையாவது யாது? பிரதிட்டைக்குரியது எது? பிரதிட்டையின் தத்துவம் என்ன? என்பவை மேலெழுங் கேள்விகளாகும். பிரதிட்டை என்றால் "பிர - திட்டை" எனப் பிரிந்து விசேடமான நிலைநிறுத்தல் எனப் பொருள்படும். அதாவது மந்திரம், தந்திரம், கிரியை, பாவனை எனபவற்றில் வல்லவராய், விதிப்படி ஆசாரியத்துவம் பெற்றவராயுள்ள சிவாசாரியர், லிங்கத்தையோ அன்றேல் பொன் முதலிய லோகங்களினாலோ அல்லது கல், மரம், சுதை என்பவற்றினாலோ செய்யப்பட்ட மூர்த்தியை விதிப்படி தாபித்தலாம், இதன் உண்மையைச் சிறிது நோக்குவாம்.

"பிரும் ஹண ஆகாச: ஸம்பூத:
ஆகாயாத வாயு:
வாயோ ரக்நி:
அக்நே ராப:
அத்ப்ய: ப்ருதுவி: |

என்பது தைத்திரீய உபநிடதம் அதாவது பிரமத்திலிருந்து ஆகாசம் தோற்றியது. ஆகாசத்திலிருந்து வாயுவும், வாயுவிலிருந்து அக்கினியும், அக்கினியிலிருந்து ஜலமும், ஜலத்திலிருந்து பிருதுவியும் முறையே தோன்றின என்பதாம்.

சைவசித்தாந்த கலாநிதியாகிய மணிவாசகப் பெருந்தகையாரும் "போற்றித் திருவகவலிலே"

பாரிடை ஐந்தாய்ப் பரந்தாய் போற்றி
நீரிடை நான்காய் நிகழ்ந்தாய் போற்றி
தீயிடை மூன்றாய்த் திகழ்ந்தாய் போற்றி
வளியிடை இரண்டாய் மகிழ்ந்தாய் போற்றி
வெளியிடை ஒன்றாய் விளைந்தாய் போற்றி"

எனத் திருவாய் மலர்ந்தருளினார்;

அன்பின் மூலத்திலிருந்து வான் தொடங்கி மண்வரையும் இழிந்து அவ்வவற்றின் தன்மைகளானான் எம்மிறைவன்.

## கும்பாபிஷேக தத்துவங்கள்

நாற்றமும், சுவையும், ஒளியும், ஊறும், ஓசையும் என்னும் ஐந்து தன்மைகளும் உடையவன். அத் தன்மைகள் முறையே மண்ணுக்கும், நீருக்கும், நெருப்புக்கும், காற்றுக்கும் வானுக்கும் உரியவை எனச் சிறப்புப்பற்றிக் கூறப்படும். அங்ஙனமேனும், மண்ணில் அவ் வைந்து தன்மைகளும், நீரில் நாற்றம் ஒழிந்த ஏனைய நான்கு தன்மைகளும், தீயில் நாற்றம் சுவை ஒழிந்த மூன்று தன்மைகளும், காற்றில் நாற்றமும் சுவையும் ஒளியும் ஒழிந்த ஏனையிரண்டு தன்மைகளும், வானில் நாற்றமும், சுவையும், ஒளியும் ஊறும் ஒழிந்த ஓரேயொரு தன்மையும் உளவென்க. இவற்றின் விளக்கத்தைப் பண்டிதமணி பாரதியாரின் திருவாசக ஆராய்ச்சிப் பேருரையுட் கண்டு தெளிக. விரிக்கிற் பெருகும்.

### கும்பாபிஷேகக் கிரியைகள்:

கும்பாபிஷேகத்தின் போது இடம் பெறுங் கிரியைகளை இரு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவை பூர்வாங்கக் கிரியைகள், விசேடக் கிரியைகள் என்பன. பூர்வாங்கக் கிரியைகளுள்ளே இறைவனுக்குச் செய்யும் விவாகாதி சுப கருமங்களிலே இடம்பெறுங் கிரியைகளும், சங்காபிஷேகம், மஹோத்ஸவம் எனபவற்றிலே இடம்பெறும் கிரியைகளும் அடங்கும். அவைதாம் அநுஜ்ஞை, கிராமசாந்தி, வாஸ்து சாந்தி, மிருத்சங்கிரகணம் (மண் எடுத்தல்) அங்குரார்ப்பணம் (முளையிடுதல்) இரக்ஷாபந்தனம். கடத்தாபனம், யாகபூஜை முதலாயின பிரதிட்டைக்குரிய. விசேடமான கிரியைகள். மூர்த்தி, ஸ்தூபி என்பவற்றைப் பிரதிட்டை செய்தல், திரிகண்ட நியாஸம், ஸ்பரிசாகுதி, அட்ட பந்தனம் செய்தல் என்பனவாம்.

### யாக பூசை:

சம்புரோக்ஷணப் பிரதிட்டையின் போது மூர்த்தியிலிருந்து ஆகர்ஷிக்கப்பட்ட கலைகளோடு கூடிய கடத்தை வேதிகையின்மீது வைத்ததும் யாகபூசை தொடங்கும். கண் முதற் புலனாற் காட்சியுமில்லோனாய் விளங்கும் இறைவனை விக்கிரகத்தில் வெளிப்பட வைத்தற்காகச் செய்யும் கிரியையே கும்பாபிஷேகக் கிரியையாம். பஞ்ச பூதமயமான இறைவனைப் பஞ்சபூதங்களின் மூலமாகவே சாந்நித்தியமடையச் செய்வதே கும்பாபிஷேகம் காட்டும் தத்துவப் பொருளாகும். எங்ஙனமெனில்,

ஆகாச வெளியில் அமைவது யாக சாலை. அங்கு உச்சாரணம் செய்யப்படும் மந்திரங்கள் வாயு தத்துவத்தைக் குறிப்பன. இவ் வாயு அங்கு ஓம குண்டங்களில் வளர்க்கப்படும் தேயுவுடன் (அக்கினி) சேர்ந்து வேலை செய்கின்றன. சிதாகாசமானதும் சிவஸ்வரூபமானதுமான யாகசாலையில் சிவ மந்திரோச்சாடனமான நாத ஒலி சேர்ந்து ஓம குண்டங்களில் சுவாலித்தெரியும அக்கினியானது வேதிகையில் வைக்கப்பட்டிருக்கும நீர் நிறைக்கப்பட்டிருக்கும் கும்பங்களோடு சந்தானம் செய்யப்படுகின்றது. இங்ஙனம் யாக பூசையின்போது நான்கு பூதங்கள் இணைகின்றன. பின்னர் நாஷீ சந்தானம் மூலமாகக் கழிவறையில் எழுந்தருளியிருக்கும் சலாரூபமான - பிருதிவிமயமான மூர்த்தியுடன் இணைக்கப்படுகின்றன. ஆதலின் ஆகாயம் வாயுவுடனும், வாயு அக்கினியுடனும், அக்கினி நீருடனும், நீர் மண்ணுடனும் படிப்படியாகச் சேர்க்கப்படுகின்றன. இங்ஙனம் விண்ணில் காட்சிக்கரியனாயிருந்த இறைவன் மண்ணிற் காட்சிக்கெளியனாய் அடியார்க்கடியனாய் மாற்றப்படும் நிலையே பிரதிட்டை அல்லது கும்பாபிஷேகம குறிக்கும் நிகழ்ச்சியாகும்.

### யாகபூசையின் சிறப்பம்சங்கள்:

யாக பூசையின்போது நிகழும் சிறப்பு நிகழ்ச்சி "சிவோகம்பாவனை" என்னும் ஆத்ம பூசையாகும். இது பூசைகள் யாவற்றினும் இடம்பெறுவதொன்றாயினும் கும்பாபிஷேகக் கிரியையில் மிகமிக முக்கியமானது. சிவாசாரியர்கள் முதலில் இறைவனைப் பூசிக்கும் கையைச் சிவஹஸ்தமாக்கல் வேண்டும். அங்ஙனமாக்கப்பட்ட கையினாலே தாம் பூசிக்கவிருக்கும் மூர்த்தியின் மந்திரங்களைத் தம்முடலிலே பதித்துத் தம்மை அம்மூர்த்தியாக்கிக் கொள்ளல் வேண்டும். இங்ஙனம் தங்கள் கையைச் சிவன் கையாக்கி, பின்னர் தம் சரீரத்தைச் சிவசரீரமாக்கல் வேண்டும். இங்ஙனம் சிவஸ்ரூபனான சிவாசாரியர் கும்ப பூசையைத் தொடங்க வேண்டும். இவ்வுண்மை, சைவசித்தாந்தச் செந்நெறியின் பேருண்மையை விளக்குவது காண்பான், காட்சி, காட்சிப்பொருள் ஆகிய மூன்றும் ஒன்றுவதே பூசனைக்கு இன்றியமையாதது. சண்டேசுவர நாயனார் மனம் மொழி மெய் என்னும மூன்றும் ஒன்றித்த நிலையிலிருந்தமையாலேயே தந்தையார் காலை வெட்டிய பாவம் அவரைச் சாரவில்லை. இவ்வடிப்படையில் நாம யாக சாலையை நோக்கும் போது வேள்வியும் சிவசொரூபம்; வேள்விச்சாலையும் சிவசொரூபம்; கும்பங்களும் சிவசொரூபம்; சிவாசாரியாரும சிவசொரூப என்னும் பேருண்மை தெற்றெனப் புலப்படும்.

(வளரும)

## குருமகாசந்நிதானமவர்கள்

# தில்லை தரிசனம்

—0—

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம் 26 ஆவது பட்டம் குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞான சம்பந்தபரமாசாரிய சுவாமிகள் பதவியேற்ற பிறகு முதல்முறையாக சிதம்பரத்திற்கு மார்கழி திருவாதிரை தரிசனத்தன்று எழுந்தருளி ஆயிரக்கால் மண்டபத்தில் ஸ்ரீ சிவகாமசுந்தரி சமேத நடராஜ மூர்த்திக்கு உயர்ந்த பொன்னுடைகள் சாற்றுபடி செய்து, நெய்லட்டுகள் நிறையசெய்து, நிவேத்தியம் ஆராதனைகள் செய்து கொண்டு, நிவேதன நெய்லட்டுகளை போது தீக்ஷிதர்களுக்கும் அன்பர்களுக்கும் வழங்கினார்கள். ஆதீனகட்டளை மடாலயத்தில் நகர ஆஸ்திக பிரமுகர்கள் கூடி வரவேற்புகளித்து ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்களிடம் அருள் பிரசாதம் பெற்றனர்.

—(எமது சிதம்பரம் நிருபர்;
ஸ்ரீ மா. பாலசுப்பிரமணியன்

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழக்கு இல, M B 8172

காரைநகர் கெடுங்காடு
தம்பிப்பிள்ளை வாமதேவன்
— வழக்காளி

எதிராக

1. இளையதம்பி குமாரவேலு, காரைநகர் வடக்கு தற்போது C. T. O கொழும்பு
2. குமாரவேலு பெண் இராசலெட்சுமி காரைநகர் வடக்கு
3. கந்தையா அருணாசலமும் பெண் 4, சிவஞானம் காரைநகர் வடக்கு காரைநகர்

—எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திரிக்கோட்டின் M B 8172-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1972-ஆம் ஆண்டு (26—2—72) மாசி மாதம் 26-ம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று, என்னுல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:— முதல் வட்டி ரூபா 6300/-ம் 16-5-66 தொடக்கம் 27-10-67 வரைக்கும் ரூபா 5000/-க்கு 8 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5½ வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 340-59 ம் ரூபா 125/- இதில் கொடுபட்டது ரூபா 6559-12.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பகுதி வலந்தலை தற்போது காரைதீவு வடக்கு கோயிற்பற்று காரைதீவு இறை 'இலகடி' பர நில. இலா 8 பனைகள் இளையதும் முதிர்ந்ததும் வான் பயிர். செய்பயிர்களும் இதற்கு எல்லை கிழக்கும் தெற்கும் ஒழுங்கை. மேற்கும் வடக்கும சண்முகம் மகாதேவாவுக்குரிய ஆதனம். இதடங்கலில் பிரிவிடப்படாத பர நில இலா 2 இககாணியிலிருக்கும் விடும் கிணறும் பிற நீங்கலாக பதிவு இல C 321/140.

நா. ஸ்ரீ இரங்கநாதன்
கொமிசனரும் விலைமதிப்பாளரும்
20, பெருமாள்கோவில்
வடக்குஒழுங்கை,
யாழ்ப்பாணம், 5-1-72.
எம். 374. 21-1-72

---

### திருத்தம்

14-1-72 இந்துசாதனத்தில் வெளிவந்த M B 11777-ஆம் இலக்க கோட்டுவிற்பனவு விளம்பரத்தில் 2ம் ஆதனத்தில் மத்திபன் குழத்து மேற்கு வயல் கெல் வாச்சம் இரண்டும்சேர்த்து ஒரு பகுதியாக உள்ள 15 பரப்பு ¾ குளி என்றிருப்பதை 15¾ குளி என்றும், இறுதி வரியில் இக்காணியில் ¾-பங்கும் என்றிருப்பதை இககாணியில் சொரியவாய் ¾ பங்கும் எனத் திருத்தி வாசிக்கவும்.

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழக்கு: இலக்கம். M B 10815

உரும்பிராய் வடக்கு. உருமபிராய்
பொன்னம்பலம் சின்னத்தம்பி — வழக்காளி

எதிராக

ஆவரங்கால், புத்தூர் பொன்னம்பலம் கைம்பெண் சந்திரவதனி பசுமாள் எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திரிக் கோட்டின் M B 10815-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விவரிக்கப்படும் மூன்று துண்டுக்காணிகளை 1972ம் ஆண்டு பங்குனி மாதம் 4ம் திகதி (4—3—72) சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு முதலாம் காணியும், 10-30 மணிக்கு இரண்டாம் காணியும், 11 மணிக்கு மூன்றும் காணியும் அந்தந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபாய் 4200/-ம், 18-5-69 தொடக்கம் 10—2—70 வரைக்கும் ரூபாய் 3000/—க்கு 10 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 326/- இதில் கோட்டுச்செலவுக்காக ரூபாய் 200/- கொடுபட்டுள்ளது.

### ஆதனங்களின் விபரம்

(1) வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திரிக் வலிகாமம் கிழக்குப் பகுதி புத்தூர் கோவிற்பற்று ஆவரங்கால் இறை "இலுப்புலன் கலட்டி" பர. நில இலா 4 குளிகள் 10½ வான் பயிர் செய்பயிர்களும் கிணறும் வீடுகளும் சொல்லப்பட்ட பர. நில. இலா. 4 குளிகள் 10½ இதற்கு எல்லை கிழக்கு ஆசைப்பிள்ளை ஏகாம்பரநாதருக்குரிய ஆதனங்கள், வடக்கு அருணாசலம் கனகசபை தருமலிங்கத்திற்கும் பங்காளருக்கும் மற்றவர்களுக்குமுரிய ஆதனங்கள், மேற்கு சாமாதி பெண் சரஸ்வதிக்குரிய ஆதனம், தெற்கு ஒழுங்கை, இதடங்கலும்,

(2) மேற்படி இறை 'கொய்வயல்' பர நில இலா. 2 சொல்லப்பட்ட பர. நி. இலா. 2க்கு எல்லை கிழக்கும் வடக்கும் சுப்பிரமணியர் மயில்வாகனத்தின் உரிமையாளரின் ஆதனம் மேற்கும், தெற்கும் நடராச இராமலிங்கசுவாமி கோவிலுக்கு சேர்மதியான ஆதனம். இடங்கலும்.

(3) மேற்படி இறை "கிளுக்கிபிலாவை வடக்கு வாதி கிளும்பிலாவை" பர. நில. இலா. 10 சொல்லப்பட்ட பர. நில. இலா. 10க்கு எல்லை கிழக்கு எதிராளிக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம், வடக்கு வாய்க்கால் மேற்கு கட்டைவல்லி சின்னப்பொடியனுக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம், தெற்கு வயிரவன் கதிரனுக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம். இதடங்கலும்.

20, பெருமாள் கோவில்
வடக்கு ஒழுங்கை.
யாழ்ப்பாணம், 12-1-71

நா. ஸ்ரீஇரங்கநாதன்
கொம்மிஷனர் & விலைமதிப்பாளர்.
எம் 375 21-1-72

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழ. இல. M. B 7635

காலஞ்சென்ற சாமுவேல் தாமோதரம்பிள்ளை ஐயாத்துரை சோமசுந்தரம் (Avenue) வீதி சுண்டிக்குளி யாழ்ப்பாணம்.
— வழக்காளி

1. இறேசி ஜெயமணி ஐயாத்துரை S. T. ஐயாத்துரையின் கைம்பெண் 2 Dr. G. E. ஜெயராசா ஐயாத்துரை இருவரும் சுண்டிக்குளி — பதில் வழக்காளிகள்

எதிராக

1. செல்லையா சோமசுந்தரமும் (2) பெண் காகரத்தினம் இருவரும் கொக்குவில் மேற்கு தற்போது ஸ்ரான்லி கல்லூரிக்குச் சமீபம், நாவலர் ரோட்டு யாழப்பாணம் வேலப்பர் ஒழுங்கை)
—எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திரிக் கோட்டின் M B 7635-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் துண்டுக்காணியை 1972-ம் ஆ மாசி மாதம் 2-ம்திகதி (2—2—72) புதன்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்

தீர்வைத் தொகை: முதல்வட்டி ரூபா 8250/- 27-8-65 தொடக்கம் 28—4—66 வரைக்கும் ரூபா 6.000/-க்கு 12 வீத வட்டியும் அதன் பின் முழுத் தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும கோட்டுச் செலவு ரூபா 368-58 சதம். இதில் கொடுக்கப்பட்ட தொகை ரூபா 6,650/-

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திரிக் யாழ்ப்பாணப்பகுதி சுண்டிக்குளி கோவிற்பற்று சிவியாதெருஇறை "பெத்தைவளவு, காடேறியான் வளவு, செட்டிக்குடியறுப்பும சூரியான் வளவும்" இதன் நிலப்பரம்பு 2 பதிவு இலக்கம் D 161/76 நில பரப்பு 3 பதிவு இலக்கம் D 159/106 இரு பிரிவுகளும் சேர்த்து நில பரப்பு ஐந்து (5) பதிவு இலக்கம் K 165/148 வீடும் கிணறும் பயிர்வகைகளும், குறிப்பிட்ட நிலப்பரப்பு 5க்கு எல்லை கிழக்கு பொன்னம்பலம் பெண் அன்னம்மாவின் ஆதனம். வடக்கு தம்பிராசா பெண் தங்கத்தின் ஆதனமும் முன் கை ஒழுங்கையும். மேற்கு இராமலிங்கம் பெண் இராசம்மாவின் ஆதனம், தெற்கு நடேசு பெண் செல்லம்மாவின் ஆதனம். இதடங்கலும பதிவு D 265/115.

22, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

வே. கோபாலபிள்ளை
கொம்மிஷனர் & விலைமதிப்பாளர்
எம் 371 21—1—72

---

## அடைவு நகை ஏலவிற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம். காரைநகர் மாப்பாணவூரி திரு. செல்லையா நவரேத்தினம் அவர்களின் அடைவுகடையில் 1971ம் ஆண்டு ஜனவரி (தை) மீ 1-ம் உ (1—1—71) திகதிக்கு முன் வைத்த அடைவு நகைகளில் மீட்கப்படாத அடைவுகள் யாவும் 1972ம் ஆண்டு பெப்ரவரி (மாசி) மாதம் 12ம் திகதி (12-2-72) சனிக்கிழமை முறபகல் ஒன்பதரை மணி தொடக்கம் மேற்படி அடைவு கடையில் வைத்துப் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

வி. செ, குட்டிப்பிள்ளை,
கொமிஷனர்,
Auctioneer Sales & Valuer
எம் 368 14, 21-1-72.

"இராச கிரி"
643, காங்கேசன்துறைவிதி,
யாழ்ப்பாணம்.

---

## Commission Sale

## கோட்டுக்கொமிஷன் விற்பனவுவிளம்பரம்

பருத்தித்துறை டிஸ்திறிக் கேட்டில் வழக்கு இல, 9388

(மரணம்) அல்வாய் மேற்கு முருகுகர் தில்லையம்பலம் —வழக்காளி
அல்வாய் மேற்கு தில்லையப்பலம் பரருசசிங்கன் —பதில்வழக்காளி

எதிராக

அல்வாய் வடக்கு சினிவாசகம் வயிரமுத்து —எதிராளி

மேற்குறித்த இலக்க வழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும் குறித்த கோட்டால் எமக்குக் கிடைத்த கொமிஷன் அதிகாரப்படியும் இதன் கீழ் விபரிக்கப்படுமாதனம் 1972-ம் ஆண்டு பங்குனி மீ 1-ஆந் திகதி (1—3—1972) புதன்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் குறித்த காணியிடமாகவிருந்து என்னுல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமராட்சிப் பகுதி கட்டைவேலிக் கோவிற்பற்று

1, அல்வாய் மழவராய குறிச்சி சாளம்பன் நாவலடி" தோட்டம் 4 மேற்படி நி பர 161, இவைகளில் வடக்கு புறமாக 1/12 நீசுகி மிகுதியில் மேற்குப் புறமாக 11/12 பங்கு ஆட்சிப்படி நீ பர 152 குளி ½. இதில் நடுப்பெற 1/8 பங்கு நீ பர 50 குளி 12, 1/8 இதிலாட்சிப்படி நி பர 2½ எல்லை கிழக்கு மாணிக்கம் பெண் செல்லமுத்துவுக்கும் மறு பேருக்குமுடையவாதனம். வடக்கு வேலுப்பிள்ளை பெண் சின்னுச்சிக்கும மறுபேருக்குமுடைய வாதனம்' மேற்கு வயிரமுத்து கதிர்காமத் தம்பியின் உருமைக்காரருக்குமுடைய வாதனம். தெற்கு ரோட்டு. இவ்வெல்லைக்குட்பட்ட நிலம் பனைகள் வடலிகள் அடங்கலும். மூழுக்காணிக்குட்பட கிழக்குப் புறமாகவிருக்கும் கிணற்றில் பங்கும் வழிவாய்க்காலுரித்தும் இதற்குக் கோட்டால் அனுமதிக்கப்பட்ட விலை ரூபாய் 4375/-

அல்வாய் மழவராய குறிச்சியிறை "சாளம்பன் நாவலடி" தோட்டம் 4, ஷை நில 161, இதில் தென் மேற்குப் புறமாக நடுப்பெற ஆட்சிப்படி நி பர 2 எல்லை கிழக்கு கணபதிப்பிள்ளை பெண் தங்கப்பிள்ளைக்கும் மறுபேருக்குமுடையவாதனம், வடக்கு ரோட்டு, மேற்கு மாணிக்கம் பெண் செல்லமுத்துக்குவுக்கும் மறுபேருக்குமுடையவாதனம், தெற்கு சிதம்பரப்பிள்ளை பிட்டிணபிள்ளைக்கும் மறுபேருக்குமுடையவாதனம், இவ்வெல்லைக்குட்பட்ட நிலம், பனைகள், வடலிகள் அடங்கலும் தெற்கெல்லையிலிருக்கும் கிணற்றுப் பங்கும் வழிவாய்க்காலுரித்தும், இதற்குக் கோட்டால் அனுமதிக்கப்பட்ட விலை ரூபாய் 3500/-

| | | | |
|---|---|---|---|
| 1. | தீர்வைத்தொகை | ரூபா | 5218 75 |
| 2 | ரூபாய் 3750/—க்கு நூற்றுக்கு 10% வட்டி 3—12—66 தொடக்கம் 30—8—71 வரை | | 2584 00 |
| 3 | ரூபாய் 7802-75க்கு 5% வட்டி 31—8—71 தொடக்கம் 24—12—71 வரை | | 97 54 |
| 4. | கோட்டுச்செலவு | | 405 71 |
| | மொத்தம் | ரூபா | 8306 00 |

இன்னும் ரூபா 7802—75க்கு 5வீத வட்டி 25 12—71 தொடக்கம் விற்பனவுத் திகதி வரையும்

"சந்நிதி வேல்"
பருத்தித்துறை,
19-1-72.

கா. முத்துக்குமாருஐயர்
கொமிசனரும் விலைமதிப்பாளரும்
எம் 376 21-1-72

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

வழ: இல. M. B. 11105

1. ஆறுமுகம் கந்தையா 2. பெண் இராசபரமேஸ்வரி இருவரும் தெல்லிப்பளை மேற்கு தற்பொழுது A 5. Govt. Flats. திம்பிரிகசையா —வழக்காளிகள்

எதிராக

கந்தையா கனகசபை உடுவில், —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திரிக் கோட்டின் M B 11105-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை 1972-ம் ஆண்டு மாசி மாதம் 16-ம் திகதி (16-2-72) புதன்கிழமை முற்பகல் 10-30 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த என்னுல் ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபாய் 4764/- இன்னும் ரூபாய் 3500/-க்கு 16—9—69 தொடக்கம் 1—6—70 வரைக்கும் 10 வீத வட்டியும் அதன்மேல் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 328-95; செலவழித்த செலவு ரூபா 219-25 வெலியாத்துச்செலவு ரூபா 59-25; எதிர்வரும் செலவு ரூபா 50-45 இதில் ரூபாய் 3794-36 கொடுபட்டுள்ளது.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப் பிரிவு உடுவில் கோவிற்பற்று உடுவில்இறை "அரசோலை & வன்னியப்பா பெருமாள் வளவு" பரப்பு நில. இலா. 22 (V. C.) செய்பயிர் வான்பயிரும் வீடும் இதற்கெல்லை கிழக்கு ஒழுங்கையும் கந்தையா கைம்பெண் நாகமுத்துப்பிள்ளையின் ஆதனமும். வடக்கு கந்தையா கைம்பெண் நாகமுத்துப்பிள்ளையின் ஆதனமும் ஒழுங்கையும், தியா சாமுவேலுக்குமுரிய ஆதனமும், அமெரிக்கன் மிசனுக்குமுரிய ஆதனமும். தெற்கு அமெரிக்கன் மிசனுக்குமுரிய ஆதனம். இதடங்கலில் பிரிவிடப்படாத ¼ பங்கும் அதன் சொத்துரிமைகளும். பதிவு: (Regd) H 150/140

ப. நா தருமலிங்கம்
கொமிஷனரும், விலைமதிப்பாளரும்.
எம். 372 21-1-71

167/1 கோயில் வீதி,
யாழ்ப்பாணம், 16-1-72

---

வான்முகில் வழாதுபெய்க, மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்

---

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறைவீதி 450-ம் இலக்கத்திலுள்ள சைவப்பிரகாச யந்திரசாலையில், 2ம் நம் இரண்டாமொழுங்கை பிறவுன் வீதியில் வசிக்கும் திரு. மூ. மயில்வாகனம் அவர்களால் 21—1—1972 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

பத்திராதிபர்: திரு. மூ. மயில்வாகனம் அவர்கள்